**2018-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 28-ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு பவானி நகர்மன்றத்தின் சாதாரண கூட்டத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் கூட்டப்பொருட்கள் விபரம்**

1. பவானி நகராட்சி பகுதிகளில் உள்ள 27 வார்டுகளிலும் கொசுக்களால் பரவும் டெங்கு காய்ச்சல் உள்ளிட்ட தொற்று நோய்கள் பரவாமல் தடுக்க வீடுவீடாக சென்று கொசுப்புழு மருந்து தெளிப்பு பணி கொசு உற்பத்தியாகும் இடங்களை அழித்தல் மற்றும் முதிர்ந்த கொசுக்களை கட்டுப்படுத்த புகை மருந்து தெளிக்கும் பணிகளை ஒப்பந்த அடிப்படையில் ஆள்வெளிக்கொணர்வு முறை (Outsourcing Basis ) வாயிலாக தினமும் 35 Domestic breeding checkers பணியாளர்களை கொண்டு நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஏற்கனவே இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ. 243/- என்றும் ஒப்பந்தப்புள்ளி விலைவிகித்தில் m/s.Trustus Outsourcing solutions ovt Led, Chennai நிறுவனத்தின் மூலம் பணியாளர்கள் பெற்று பணிகள் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் மேற்படி பணியின் ஒப்பந்தக்காலம் 30.09.2018-ம் தேதியுடன் முடிவடைவதால் பொது சுகாதாரப்பணி அவசரம் கருதியும் டெங்கு நோய் தடுப்பு பணியின் அவசியம் கருதியும் m/s. Trustus Outsourcing solutions Pvt Led, Chennai நிறுவனத்தின் வழங்கியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள சம்மதத்தை ஏற்று மேற்காணும் ஒப்பந்த விலைவிகிதமான ரூ.243/- ல் 01.10.2018 முதல் 31.12.2018 -ம் தேதி முடிய ஒப்பந்த காலத்தை நீட்டித்து தொடர்ந்து பணி மேற்கொள்ளவும் அதற்கான செலவினம் ரூ. 7.15/- இலட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்
2. நோய் தடுப்பு பணியின் அவசியம் கருதி மேற்படி செலவினம் ரூ.7.15 இலட்சத்தினை பொது நிதியிலிருந்து செலவினம் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்.217/2017/எச்1)

2. பவானி நகராட்சி பகுதியில் மக்கும் குப்பைகளை கொண்டு Onsite composting முறையில் உரம் தயார் செய்ய ஏற்கனவே ISI தரச்சான்று பெற்ற 6x4x2 சைசிலான multilayered cross laminated sheet Tarpalin LDPE கொண்டு பணி மேற்கொள்ள ஏற்கனவே மன்றம் நகர்மன்ற தீர்மான எண். 251, நாள்.31.08.2018 -ல் ஒப்புதல் வழங்கியுள்ளதன் பேரில் கடந்த 18.09.2018-ம் தேதி இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **ஒப்பந்ததாரரின் பெயர் முகவரி** | **ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம்** |
|---|---|
| | ஒரு தார்பாலின் மற்றும் மூங்கில் அமைப்பிற்கு |
| 1. பி.ஏ. செல்லப்பன், ஒப்பந்ததாரர், பவானி | ரூ.3000/- |
| 2. எஸ். பாலசுப்ரமணியன், ஒப்பந்ததாரர், பவானி | ரூ. 2800/- |

வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 2-ல் குறிப்பிடப்பட்டுள்ள m/s. எஸ்.பாலசுப்ரமணியன், ஒப்பந்ததாரா், பவானி அவர்களின் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மற்றொன்றை விட குறைவாக உள்ளதால் அதனை மன்றம் அங்கீகரித்து பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் ஒப்புதல் வழங்கலாம். (ந.க.எண்.1382/2018/எச்1)

3. பவானி நகராட்சி வார்டு எண். 2 காமராஜ் நகர் பள்ளி பின்புறம், வார்டு எண். 4 புதிய பேருந்து நிலையம் இருசக்கர வாகனம் நிறுத்துமிடம் அருகில் வார்டு எண். 11, மயானம் அருகில், தேவபுரம் பூங்கா, வார்டு எண். 20, அனுசுயா பிரவச விடுதி பின்புறம் மற்றும் வார்டு எண். 24 பழைய பேருந்து நிலையம் ஆகிய பகுதிகளில் ஆன் சைட் கம்போஸ்ட்டிங் அமைத்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.3.50 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண். 228 நாள்: 31.07.2018-ல் அனுமதி அளித்துள்ளதன் பேரில் 20.9.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தங்களின் ஒப்பு நோக்குப்பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம் / குறைவு |
|---|---|---|
| 1 | திரு.எம். அப்புசாமி ஒப்பந்ததாரர் | சதவிகிதம்மதிப்பீட்டு விகிதத்தை விட குறைவு 0.18% |
| 2 | திருவாளர். ஆர்.என்.& கோ ஒப்பந்ததாரர் | சதவிகிதம் மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் 1.20% |

அலுவலக குறிப்பு:

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விகிதத்தை விட 0.18% சதவிகிதம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. எம். அப்புசாமி ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

( ந.க.எண்.1188/2018/இ1)

4. பவானி நகராட்சி வார்டு எண். 24 மக்கான் வீதியில் விநாயகர் கோவில் அருகில் சிறு பாலம் கட்டும் பணிக்கு மதிப்பீடு 1.20 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண். 256, நாள்: 31.08.2018-ல் அனுமதி அளித்துள்ளதின் பேரில் 27.09.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம் / குறைவு |
|---|---|---|
| 1 | திரு.பி.ஏ. செல்லப்பன் ஒப்பந்ததாரர் | சதவிகிதம்மதிப்பீட்டு விகிதத்தை விட குறைவு 0.16% |
| 2 | திரு. எஸ். பாலசுப்பிரமணியன் ஒப்பந்ததாரர் | சதவிகிதம் மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் 0.71% |

அலுவலக குறிப்பு:

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விகிதத்தை விட 0.16% சதவிகிதம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. பி.ஏ.செல்லப்பன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

( ந.க.எண்.1416/2018/இ1)

5. பவானி நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள 40HP மோட்டாரின் பம்பு மற்றும் Starter பழுது பார்த்தல் பணிக்கு மதிப்பீடு 0.50 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண்.225, நாள்: 31.07.2018 அனுமதி அளித்துள்ளதன் பேரில் 27.09.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம் / குறைவு |
|---|---|---|
| 1 | திருவாளர்.குருஎலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ் | சதவிகிதம் மதிப்பீட்டு விகிதத்தை விட குறைவு 0.62% |
| 2 | திருவாளர்.ஸ்ரீ வேல் எலக்ட்ரிக்கல் | சதவிகிதம் மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் 1.71% |

அலுவலக குறிப்பு:

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விகிதத்தை விட 0.62% சதவிகிதம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருவாளர் குரு எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

( ந.க.எண். /2018/இ1)

6. பவானி நகராட்சி அலுவலகத்தில் உள்ள ஜெனரேட்டர் பழுது பார்த்தல் பணிக்கு மதிப்பீடு 0.27 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண். 187, நாள்: 09.07.2018-ல் அனுமதி அளித்துள்ளதின் பேரில் 27.09.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பேரில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப்பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம் / குறைவு |
|---|---|---|
| 1 | திரு.எம். அப்புசாமி ஒப்பந்ததாரர் | சதவிகிதம் மதிப்பீட்டு விகிதத்தை விட குறைவு 0.69% |
| 2 | திருவாளர். ஆர்.என்.& கோ ஒப்பந்ததாரர் | சதவிகிதம் மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் 1.29% |

அலுவலக குறிப்பு:

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விகிதத்தை விட 0.69% சதவிகிதம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எம். அப்புசாமி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

( ந.க.எண். /2018/இ1)

7. பவானி நகராட்சி அலுவலகத்தில் உள்ள பிரிண்டர்களுக்கு டோனர் நிரப்பும் பணி தொகை ரூ.5000/-க்கு நகர்மன்ற தீர்மான எண். 247 நாள்: 31.08.2018-ல் அனுமதி அளித்துள்ளதன் பேரில் 27.09.2018 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட மூன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட மூன்று விலைப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப்பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | விபரம் | திருவாளர் Hareesh It solutions Erode | திருவாளர் Azure Technologes erode | திருவாளர் VL Computers Erode |
|---|---|---|---|---|
| 1 | Tonner Refill | Rs.450/- | Rs.550/- | Rs. 500/- |
| 2 | AP Wiper Blade | Rs.175/- | Rs.250/ | Rs. 225/- |
| 3 | PCR Roller | Rs.300/- | Rs.450/ | Rs. 400/- |
| 4 | Doctor Blade | Rs.175/- | Rs.280/ | Rs. 225/- |
| 5 | Developer Roller ( magnetic) | Rs.400/- | Rs.500/ | Rs. 505/- |
| 6 | OPC Drum | Rs.550/- | Rs.650/ | Rs. 600/ |
| 7 | Compatible Toner Cartridge 505A/280A | Rs.1900/- | Rs.2100/- | Rs.2420/- |

அலுவலக குறிப்பு:

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வ.எண். 1 முதல் 7 வரை உள்ள இனங்களுக்கு குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள திருவாளர் Hareesh IT Solutions, Erode அவர்களின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

8. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருப்பூர் அவர்களின் 27.09.2018-ம் தேதியிட்ட கூட்ட அறிவுரைகளின்படி இந்நகராட்சியின் திடக்கழிவு மேலாண்மை திட்டம் மற்றும் SBM திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகள் Digital Camara மூலம் புகைப்படங்கள் எடுத்து 12 X 8 சைசில் கலர் பிரிண்ட் போட்டு 28.09.2018-ம் தேதி மதியம் 2.00 மணிக்குள் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே அவசர அவசியம் கருதி உள்ளூர் போட்டோ நிறுவனங்களில் இப்பணியினை மேற்கொள்ளவும் இதற்கு ஆகும் செலவினத்திற்கு ரூ.5000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம். (ந.க.எண். 350/2018/எச்1)

9. பவானி நகராட்சியின் திட்டப்பணிகள் மற்றும் திட்டப்பணிகள் சம்பந்தமான பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகள் போன்றவை " நாளிதழில்" விளம்பரம் செய்த விபரம் கீழ்கண்டவாறு

| வ. எண். | நாளிதழ் விபரம் | விளம்பர விபரம் | பட்டியல் எண்/ நாள் | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | "Accord,Advertising Agencies சென்னை | 'SWM Tender Notice (557/18/E1 Dt:25.8.18) | AAA/0527/18 Dt: 31.818 | ரூ.90,563/- |
| 2 | "பிரைட் " அட்வர்டைஸ்" சென்னை " தினத்தந்தி" | குடிநீர் கட்டண உயர்வு (1337/18/இ1) | IDRO/ 5071 Dt. 25.8.18 | ரூ.6,962 |
| 3 | "தினபூமி" மதுரை | "SWM" ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு | 70362/ 26.8.18 | 11,844/- |
| 4 | " மாலை மலர்" ஈரோடு | திட்டப்பணிகள் | 018090173 /12.9.18 | ரூ.9450/- |
| 5 | "தினபூமி" கோவை | ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு 806/18/இ1 07.09.2018 | 70389/ 09.09.2018 | ரூ.4935/- |
| | | | | ரூ. 1,23,754/- |

மேற்படி விளம்பரக்கட்டணத்தை பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் " மேற்கண்ட விபரப்படி " நாளிதழ்களுக்கு பட்டியல் தொகை வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம் (ந.க.எண். 820/2018/இ1)

10. பவானி நகராட்சி பகுதியில் 01.10.2018 முதல் கீழ்கண்டவாறு வைப்புத் தொகை மற்றும் குடிநீர் கட்டணம் உயர்வு செய்து வசூல் இந்நகர்மன்ற தீர்மானம் எண்.217, நாள்: 31.07.2018-ல் தீர்மானிக்கப்பட்டது.

மேற்கண்ட திட்டத்தின் கீழ் குடிநீர் வைப்புத் தொகை மற்றும் குடிநீர் கட்டண உயர்வு செய்வது குறித்து தினத்தந்தி நாளிதழில் 26.08.18 -ல் விளம்பரம் செய்யப்பட்டது. மேற்படி கட்டண உயர்வு குறித்து 30 தினங்களுக்குள் பொது மக்களுக்கு ஆட்சேபனை இருந்தால் நகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு விண்ணப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டது. வரப்பெற்ற ஆட்சேபனைகள் குறித்து உரிய குழு அமைத்து கலந்து ஆலோசனை செய்யப்பட்டது. பவானி நகராட்சியில் தற்போது குடிநீர் திட்ட பராமரிப்பு பணிகள், மின்கட்டணம், தலைமை நீரேற்று நிலைய ஜெனரேட்டர் எரிபொருள் மற்றும் பராமரிப்பு கட்டணம் அதிக அளவில் செலவு ஆவதால் செலவினங்களை ஈடுகட்டும் வகையில் கருத்தில் கொண்டும் குடிநீர் விநியோக பயன்பாட்டின் அவசியம் கருதியும் ஆட்சேபனை மனுக்கள் நிராகரிக்கப்பட்டு உயர்வு செய்யப்பட்ட கட்டணத்தினை கீழ்காணும் விபரப்படி 01.10.2018 முதல் உயர்வு செய்து வசூல் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

குடிநீர் இணைப்புவைப்புத் தொகை

| வ. எண். | உபயோகம் | தற்போது உள்ள குடிநீர் வைப்புத் தொகைரூ. | 01.10.2018 முதல் உயர்வு செய்யப்படஉள்ள குடிநீர் வைப்புத் தொகைரூ. |
|---|---|---|---|
| 1 | வீட்டு உபயோகம் | 2000.00 | 3000.00 |
| 2 | வீட்டு பயன்பாடுஅல்லாதவை ( வணிகம் மற்றும் தொழிற்சாலை உபயோகம்) | 5000.00 | 6000.00 |

குடிநீர் கட்டணம்

| வ. எண். | உபயோகம் | மாதம் ஒன்றுக்கு தற்போது உள்ள குடிநீர் கட்டணம் | 1.10.2018 முதல் உயர்வு செய்யப்பட உள்ள குடிநீர் கட்டணம் |
|---|---|---|---|
| 1 | வீட்டு உபயோகத்திற்கு கு | 1. மாதம் ஒன்றுக்கு 10,000 லிட்டர் மற்றும் அதன் பாகத்திற்கு குறைந்த பட்ச கட்டணம் ரூ.100<br><br>2. மாதம் ஒன்றுக்கு 10,000 லிட்டர்களுக்கு மேல் உபயோகத்திற்கு 1000 லிட்டர்களும் மற்றும் அதன் பாகத்திற்கு ரூ.15/- | 1.மாதம் ஒன்றுக்கு 10,000 லிட்டர் மற்றும் அதன் பாகத்திற்கு குறைந்த பட்ச கட்டணம் ரூ.150/-<br><br>2. மாதம் ஒன்றுக்கு 10,000 லிட்டர்களுக்கு மேல் உபயோகத்திற்கு 1000 லிட்டர் மற்றும் அதன் பாகத்திற்கு ரூ.20/- |
| 2 | வீட்டுஉபயோகம் அல்லாதது தொழிற்சாலை மற்றும் வணிக உபயோகத்திற்கு | 1.மாதம் ஒன்றுக்கு 10,000 லிட்டர் மற்றும் அதன் பாகத்திற்கு குறைந்த பட்ச கட்டணம் ரூ.450/-<br>2.மாதம் ஒன்றுக்கு 10,000 லிட்டருக்கு மேல் உபயோகத்திற்கு 1000 லிட்டர் மற்றும் அதன் பாகத்திற்கு ரூ.45/- | 1. மாதம் ஒன்றுக்கு 10,000 லிட்டர் மற்றும் அதன் பாகத்திற்கு குறைந்த பட்ச கட்டணம் ரூ.500/-<br>2.மாதம் ஒன்றுக்கு 10,000 லிட்டருக்குமேல் உபயோகத்திற்கு 1000 லிட்டர் மற்றும் அதன் பாகத்திற்கு ரூ. 50/- |

அலுவலககுறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம் ( ந.க.எண்.1137/2018/இ1)

11. இந்நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் சேகரிக்கப்படும் பிளாஸ்டிக் கழிவுகளில் மறுசுழற்சி பயன்பாட்டிற்கு போகும் பிளாஸ்டிக் கழிவுகளை தவிர்த்து விற்பனைக்கு ஆகாத பிளாஸ்டிக் பேப்பர், பிளாஸ்டிக் பாட்டில், பேப்பர்கப், துணிகழிவுகள் , டயர்கள் மற்றும் இதர எரியும் தன்மையுடைய கழிவுகளை பவானி நகராட்சி திடக்கழிவு மேலாண்மை துணை விதிகள் 2016-ன்படி பிரிவு5 (பி)-ல் தெரிவித்துள்ளபடி எரிசக்தி துறை அல்லது சிமெண்ட் ஆலைகளுக்கு மூலப்பொருளாக வழங்கி கழிவுகளை செயலாக்கம் செய்ய வேண்டும் என தெரிவிக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் கூட்ட அறிவுரைகளின்படி Ultra Tech Cements Ltd Ariyalur சிமெண்ட் ஆலைக்கு மேற்படி கழிவுகளை இலவசமாக இந்நகராட்சி வாகனம் மூலம் அனுப்பி வைக்க புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தி கொள்ளவும் இந்நகராட்சி பகுதியில் சேரும் மேற்படி குறிப்பிட்ட கழிவுகளை அனுப்பி வைக்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.359/2018/எச்1)

(ஓம்) திரு.க.கதிர்வேல்
தனி அலுவலர் (ம) ஆணையாளர் (பொ)
பவானி நகராட்சி

**28.09.2018 ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு நடை பெற்ற நகர்மன்றத்தின் சாதாரணக் கூட்டத்தின் தீர்மானம் எண். 266 - ன் உண்மை நகல்**

பவானி நகராட்சியின் திட்டப்பணிகள் மற்றும் திட்டப்பணிகள் சம்பந்தமான பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகள் போன்றவை ‟ நாளிதழில்” விளம்பரம் செய்த விபரம் கீழ்கண்டவாறு

| வ. எண். | நாளிதழ் விபரம் | விளம்பர விபரம் | பட்டியல் எண்/ நாள் | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | ‟Accord,Advertising Agencies சென்னை | ‘SWM Tender Notice (557/18/E1 Dt:25.8.18) | AAA/0527/18 Dt: 31.818 | ரூ.90,563/- |
| 2 | “பிரைட் ” அட்வர்டைஸ்ங்” சென்னை ‟ தினத்தந்தி” | குடிநீர் கட்டண உயர்வு (1337/18/இ1) | IDRO/ 5071 Dt. 25.8.18 | ரூ.6,962 |
| 3 | “தினபூமி” மதுரை | “SWM” ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு | 70362/ 26.8.18 | 11,844/- |
| 4 | ‟ மாலை மலர்” ஈரோடு | திட்டப்பணிகள் | 018090173 /12.9.18 | ரூ.9450/- |
| 5 | “தினபூமி” கோவை | ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு 806/18/இ1 07.09.2018 | 70389/ 09.09.2018 | ரூ.4935/- |
| | | | | ரூ. 1,23,754/- |

மேற்படி விளம்பரக்கட்டணத்தை பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் ‟ மேற்கண்ட விபரப்படி ‟ நாளிதழ்களுக்கு பட்டியல் தொகை வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம் (ந.க.எண். 820/2018/இ1)

**நகர்மன்ற தீர்மானம் எண். 266, நாள்: 28.09.2018**

அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது

(ஒம்) திரு.க.கதிர்வேல்
தனி அலுவலர்
பவானி நகராட்சி

// உண்மை நகல் //

ஆணையாளர்
பவானி நகராட்சி